**செ. கு. எண்: 123** **நாள்: 25.05.2013**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 25.5.2013

சென்னை பெருநகர காவல், கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.தியாகராஜன் அவர்கள் 24.5.2013 அன்று ஐஸ் அவுஸ் பகுதி, செல்லம்மாள் தோட்டம் அருகே ஒரு குற்றவாளியை "செய்முறை குற்றவாளி தணிக்கை" செய்து விட்டு திரும்பும்போது, அந்தக் குற்றவாளி கத்தியால் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று (25.5.2013) உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

கடமை உணர்வுடன் பணியாற்றும் போது குற்றவாளியின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. தியாகராஜன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. தியாகராஜன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

அன்னாரது இறுதிச் சடங்கின் போது முழு காவல் மரியாதை வழங்கப்பட வேண்டும் என்றும், எனது சார்பில் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. வி.மூர்த்தி அவர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதோடு இறுதி சடங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**